# கிராமியக் கலைகள்

காரை. செ. சுந்தரம்பிள்ளை



கலை என்பது கருத்தின் உறைவிடமாகவும் அழகின் சிறப்பிடமாகவும் உள்ளது. இன்பம் அதன் பயனாகும். "ஒருவன் முன்பு அனுபவித்த உணர்வைத் தன் உள்ளத்தில் மீண்டும் எழுப்பி அசைவுகள், கோடுகள், வர்ணங்கள், ஒலிகள் அல்லது சொல் வடிவங்கள் மூலம் அந்த உணர்வைப் பிறரும் உணரும்படி செய்ய வேண்டும். இதுவே கலையின் செயலாகும்." என்பர் டால்ஸ்ராய்.

"கலைகள் மனித சமூகத்தின் தொழிற்போக்கில் தோன்றியவை.அதனால் அவை மனித சமூகமயமானவை. இவற்றின் இயல்புகள் மனித சமூக அமைப்பின் பொதுவான தன்மைகளைப் பொறுத்து அமைகின்றன" என்பர் தொம்ஸன்.

"எந்த ஒரு மனிதன் ஒரு கல்லைத் தனக்குப் பயன்படும் ஒரு கருவியாக அமைத்துப் பயன்படுத்த ஆரம்பித்தானோ அந்த மனிதனே உலகின் முதலாவது கலைஞனாவான்" என்பர் ஏர்ணஸ்ட் பிஷர். இவ்வாறு தான் கலைகள் வடிவம் பெறத் தொடங்கின.

கலையில் செயல், பயன், திறமை, அழகு, சுவை என்ற அமிசங்கள் உண்டு. பயன் அமிசம் அதிகப்படுமானால் அது கைவினை என்ற பிரிவில் அடங்கும். அழகு அல்லது முருகியல் அமிசம் அதிகப்படுமானால் அது அழகுக் கலையாக அல்லது நுண் கலையாக வடிவம் பெறுகிறது. இவற்றுள் நுண்கலைகளை இரு பெரும் பிரிவுகளுக்குள் அடக்கலாம்.

**(அ). செந்நெறிக்கலைகள்.**

**(ஆ). கிராமியக் கலைகள்**

கல்வி அறிவு மிக்க நகரப்புற, உயர்மட்ட மக்களாற் பேணப்பட்டு வரும் கலைகள் செந்நெறிக் கலைகளாகும். (CLASSICAL ART) படிப்பறிவில்லாப் பாமர, நாட்டுப்புற, கிராமிய மக்களாற் பேணப்பட்டு வருவன கிராமியக் கலைகளாகும். (FOLK ART)

இவற்றுள் ஈழத் தமிழ் மக்களுடைய கிராமியக் கலைகள் பற்றி இனி ஆராய்வோம்.

(கிராமியக் கலைகளை இப்பொழுது நாட்டுப்புறக் கலைகள் என்றே குறிப்பிடுகின்றனர்.)

ஈழத் தமிழ் மக்களிடையே பயின்று வந்த, பயின்று வரும் கிராமியக் கலைகளுள் முக்கியமானவையாக கும்மி, கோலாட்டம், வசந்தன், காவடி, கரகம், பொய்க்காலாட்டம் (புரவியாட்டம்), மகிடி, உடுக்கடிக் கதை, நாட்டுக் கூத்து என்பன விளங்குகின்றன.

கும்மியாட்டம் பொதுவாக விழாக்காலங்களில் ஆடப்படுகின்றது. ஆண்களோ பெண்களோ வட்டமாக வளைந்து நின்று பாட்டுப் பாடிக்கொண்டு கைகளால் தட்டி ஆடுவது கும்மியாகும். ஆண்களை விடப் பெண்களே இதில் அதிகமாக ஈடுபடுகின்றனர். ஆண்கள் மட்டும் ஆடும் கும்மியை ஒயில் கும்மியென்றும், பெண்கள் ஆடும் கும்மியை வெறுமனே கும்மியென்றும் அழைப்பர்.

கைகளில் சிறிய கோல்களை வைத்துக் கொண்டு பாடியாடும் ஆட்டமே கோலாட்டமாகும். பாடப்படும் பாடல்களின் ஓசைக்கும் பக்கவாத்தியங்களின் ஓசைக்கும் ஏற்றபடி ஆடிய வண்ணம் தங்கள் இரு கைகளிலும் உள்ள கோல்களை ஒன்றோடு ஒன்று தட்டி ஒலி எழுப்புவர். மாறிமாறி ஆடும் போது ஒருவர் கையில் உள்ள கோலால் மற்றவருடைய கையில் உள்ள கோலைத் தட்டி ஒலி எழுப்பி ஆடிப்பாடுதல் இன்னோர் சிறப்பம்சமாகும். கும்மியிற் கையாற் தட்டித் தாளம் போடுவதை இங்கே கோலால் தட்டிப் போடுகின்றனர். கும்மி, கோலாட்டம் என்பவற்றுக்கென தனிப்பட்ட மெட்டிலமைந்த கிராமிய இசைப்பாடல்கள் உண்டு.

இற்றைக்கு நாற்பது ஐம்பது வருடங்களுக்கு முன்னர் கும்மி, கோலாட்டம் என்பன ஈழத் தமிழ் மக்களிடையே

பண்டிகைகளின்போது பரவலாக ஆடப்பட்டு வந்தன. வருடப்பிறப்பு, தீபாவளி, நவராத்திரி, ஆகிய தினங்களில் வீடு வீடாகச் சென்று கும்மி, கோலாட்டம் என்பவற்றை ஆடி மகிழ்ந்து வரும் மரபு இருந்தது. இப்பொழுது இம் மரபு அற்றுப் போனாலும் இவ் வடிவங்கள் வாழ்ந்து கொண்டேயிருக்கின்றன.

வசந்தனாட்டம் யாழ்ப்பாணத்தில் ஒரு காலத்தில் பரவலாக ஆடப்பட்டு வந்தது. வானம் பொய்க்கும் போது இந்த ஆட்டம் நிகழ்த்தப்பட்டது. இது ஓரளவு கோலாட்டத்தை ஒத்தபோதும் பலவகையான ஆடல் முறைமைகளைக் கொண்டது. கட்டுவன் எனும் ஊரில் வீரபத்திரர் வசந்தனும், காரைநகரில் அம்மன் வசந்தனும் அண்மைக்காலம் வரை ஆடப்பட்டுவந்தன.

மட்டக்களப்பில் ஆடப்படும் வசந்தனுக்கும், யாழ்ப்பாணத்தில் ஆடப்படும் வசந்தனுக்கும் நிறைய வேறுபாடுகள் உண்டு. யாழ்ப்பாணத்து வசந்தன்கதை தழுவாத கூத்து மரபை ஒட்டியது. தெய்வத்தை வாழ்த்துதல் – வேண்டுதல் என்பனவே முக்கியமாக இதில் இடம் பெறும். மட்டக்களப்பு வசந்தனில் வசந்தராசன் கொலு, வசந்தராசன் வாசல், கட்டியக்காரன் வரவு ஆகிய நாட்டுக்கூத்து அம்சங்களைக் கொண்டு காணப்படுகின்றது.

காவடி, கரகம் ஆகிய ஆட்டங்கள் சமயத்தொடர்பு உடையவை. நேர்த்திக் கடனுக்காகத் தமிழ் மக்களால் ஆடப்பட்டுவரும் கலை வடிவங்களாகும். எனினும் பாடசாலை விழாக்களிலும், கலை விழாக்களிலும், சமயத்தொடர்பின்றி ஆடப்படும் கலையாகவும் இப்பொழுது இடம் பிடித்துவிட்டது. காவடி ஆட்டத்தின் நோக்கம், அமைப்பு, ஆட்டமுறைமை என்பவற்றைக்கொண்டு இதனைப் பல பெயரிட்டு அழைப்பர். அவை யாவன: அன்னக்காவடி, பாற்காவடி, பன்னீர்க்காவடி, பறவைக் காவடி.

ஒரு காலத்தில் பொய்க்காற் குதிரையாட்டமும் ஈழத்தில் பரவலாக ஆடப்பட்டு வந்தது. சொந்தக் காலினால் ஆடாமல் மரத்தினால் செய்யப்பட்ட பொய்க்கால்களின் மேல் நின்று ஆடுகின்ற காரணத்தால் இது பொய்க்காலாட்டம் எனவும், பெரிய பொம்மைக் குதிரையைத் தோளில் மாட்டி குதிரைச் சவாரி செய்வது போல ஆடுகிற காரணத்தால் புரவியாட்டம் எனவும் இது பெயர் பெறுகின்றது. பொய்க்காற் குதிரையாட்டத்திற்குப் பெயர் பெற்ற ஊர்களாக அரியாலை, வட்டுக்கோட்டை, கள்ளியங்காடு ஆகிய இடங்கள் விளங்கின. இப்பொழுது மலையகத்தில் மட்டும் இரண்டொரு கலைஞர்கள் உள்ளனர்.

பொம்மலாட்டத்தைப் பாவைக் கூத்து, பாவைநாடகம் என்றும் கூறுவர். பாவைக்கூத்தைத் தோற்பாவைக்கூத்து, மரப்பாவைக்கூத்து எனவும் இரு வகையாக அமைத்துக் காண்பித்தனர்.

பொம்மைகளை நடிகர்களாகக் கொண்ட நாடகமே பொம்மலாட்டமாகும். சூத்திரதாரிகள் பொம்மைகளை மறைந்து நின்று இயக்குவதோடு, மறைந்திருக்கும் இருவரோ, மூவரோ உரையாடல்களையும், பாடல்களையும் பேசிப் பாடுவதன் மூலம் நாடகம் ஒன்றைப் பார்க்கின்ற உணர்வினை ஏற்படுத்துவர். ஒரு காலத்தில் ஈழத்தமிழ் மக்களிடையே உயிர்த்துடிப்புடன் வாழ்ந்து கொண்டிருந்த பொம்மலாட்டக்கலை இன்று முற்றாக மறைந்து விட்டது.

ஈழத்தமிழ் மக்களுடைய கிராமியக் கலை வடிவங்களுள் ஒன்றாக மகிடிக்கூத்து உள்ளது. யாழ்ப்பாணம் - முல்லைத்தீவு ஆகிய இடங்களில் வாழ்ந்த இக்கலை இப்பொழுது மட்டக்களப்பில் மட்டும் ஆடப்பட்டு வருகின்றது. மந்திர தந்திரம் நிறைந்த இக் கூத்து வடிவம் புலம் பெயர் ஐதீகத்துடன் தொடர்புடையதாகும்.

உடுக்கடிக்கதை தமிழ் மக்களுடைய முக்கியமான கிராமியக் கலையாக அண்மைக்காலம் வரை விளங்கி வந்திருக்கின்றது. கோவில் திருவிழாக்களின்போதும், பண்டிகைகளின் போதும், ஏனைய கொண்டாட்டங்களின் போதும் உடுக்கடிக் கதை நிகழ்ச்சிகள் இடம் பெற்று வந்தன.கலைஞர் ஒருவர் உடுக்கடித்துக் கதைகூறும் மரபில் இருந்தே காத்தவராயன் கூத்து, கோவலன் கூத்து என்பன வடிவம் பெற்றன என்பர்.

கிராமியக்கலைகளுள் சிறப்பான வடிவமாக இன்றும் இலங்கையில் வாழ்ந்து கொண்டிருப்பது நாட்டுக் கூத்தாகும். இது யாழ்ப்பாணம், மன்னார்,முல்லைத்தீவு, மட்டக்களப்பு ஆகிய பிரதேசங்களில் இப்பொழுதும் ஆடப்பட்டு வருகின்றது. இக் கூத்துள் வடமோடி, தென்மோடி, வடப்பாங்கு, தென்பாங்கு, காத்தவராயன் கூத்து எனப் பல வகைகள் அடங்கும். சிங்கள மக்களிடையே காணப்படும் "நாடகம" எனும் கூத்து வடிவம் தமிழ் மக்களிடம் இருந்து பெறப்பட்ட நாட்டுக்கூத்து வடிவமேயாகும்.

மன்னாரில் "வாசாப்பு", "வசன வாசாப்பு" எனும் கூத்து வடிவங்களும் உண்டு. இவை குறைந்த பாத்திரங்களைக் கொண்ட சிறிய கூத்து வடிவங்களாகும்.

மலையகத்தில் மிகவும் பிரபலமான கிராமியக் கலைவடிவமாக "காமன் கூத்து" உள்ளது. இது தவிர "பொன்னர் சங்கர்" "அருச்சுனன் தபசு" ஆகிய கிராமியக் கூத்துக்களும், மேலே குறிப்பிட்ட காவடி, கரகம், கும்மி, கோலாட்டம் ஆகிய கலைவடிவங்களும் இன்று உள்ளன.

கிராமியக்கலை வடிவங்களுக்கும்,

செந்நெறிக் கலைவடிவங்களுக்கும் ஓரளவு ஒற்றுமை இருப்பது போலத் தோன்றினும் வேறுபாடுகளே அதிகமாகும்.

நாட்டுப்புறக் கலைகள் தொழிற் சார்பு உடையவை. அடி நிலை மக்களுடையவை. ஆடுவோரும் பார்ப்போரும் நுகர்வோரும் ஒத்த தன்மையுடைய பாமர மக்களாவர். இவர்கள் தங்களுடைய ஆத்ம திருப்திக்காக நேரம் கிடைக்கும் போதெல்லாம் ஆடிப்பாடி மகிழ்கின்றனர். செந்நெறிக் கலைகள் தொழிற்சார்பற்றவை. உயர் மட்ட மக்களுடையவை.

கிராமியக் கலைகள் குறிப்பிட்ட கிராமங்களுக்கு அல்லது பிரதேசங்களுக்கு மட்டுமுரிய சிறப்பியல்புகளைக் கொண்டிருக்கும். (உ-ம்: வடமோடி, தென்மோடி முதலியன) செந்நெறிக்கலைகள் இவற்றைக் கடந்து அனைத்துப் பிரதேசங்களுக்கும் உரியவையாக விளங்கும். (உ-ம்: பரதநாட்டியம்) கிராமியக் கலைகளை நிகழ்த்துவோர் தொழிலாளர்களும், பாமர மக்களுமாவர். தொழில் முறைக் கலைஞர்கள் (PROFESSIONALS) இவர்களிடையே கிடையாது. செந்நெறிக்கலைகளை நிகழ்த்துவோர் பெரும்பாலும் தொழில் முறைக் கலைஞர்களாகவே இருப்பர்.

கிராமியக் கலைகளில் யதார்த்தம் வெளிப்படும். இம் மக்களுடைய மனோபாவம் வாழ்க்கையுடன் தொடர்புடையனவாக முரண்பாடின்றிக் காணப்படும். ஆனால் செந்நெறிக்கலைஞர்களுடைய மனோபாவம்இவ்வாறு அமைவதில்லை.

கிராமியக் கலைகள் சமகாலச் சமுதாயத்தைப் படம் பிடித்துக் காட்டும் காலக் கண்ணாடியாகவே பெரிதும் விளங்கும். இவை சமூக விழாக்களாகவே இடம் பெறும். இவ் இயல்பு செந்நெறிக்கலைளில் குறைவானதாகவே இருக்கும். கிராமியக்கலைகள் கட்டுப்பாடற்று மதர்த்து வளரும் குளத்தங்கரைச் செடிகொடிகளை ஒத்தவை. பூந்தோட்டத்தில் நீரூற்றி, கத்தரித்தும், வெட்டியும் செம்மைப்படுத்தப் பட்டு வளர்க்கப்படும் செடி கொடிகளை ஒத்தவை செந்நெறிக் கலைகள். இரண்டும் அழகுடைய வேயாயினும் இயற்கை அழகை கிராமியக் கலைகளில் தான் காணமுடியும். இவ்வழகினைப் பொழிந்து வரும் இக் கலைவடிவங்களைப் பேணிவரும் கடப்பாடு ஒவ்வொரு தமிழ் மகனுக்கும் உண்டு என்பதை ஈழத்தமிழ் மக்கள் நெஞ்சில் நிறுத்துதல் வேண்டும்.

## உங்களுக்கு கேட்கவில்லையா?

கறுப்பு மேகத் தூரிகைகள்
இருட்டுக்கு சாயம் பூசுகின்றனவோ?
மௌன வானில் அஸ்தமன விளிம்புகளில்
சோகச்சிறகுகள் உதிர்க்கும்
என் சொந்தப் புறாக்களே,
உங்கள் இதயத்துடிப்பு ஒவ்வொன்றின் மீதும்
எங்கள் கண்ணீர்த் துளிகள்
விழுவதை நீங்கள் அறிவீர்களா?

அகதி முகாம்களுக்குள் இருந்து வெளிவரும்
உங்கள் கண்ணீரையும் துயரங்களையும்
நாம் போர்வையாக்கிக் கொல்வதுண்டு;
பாலைவன ரோஜாக்களுக்கு புயல் சொந்தமாம்;
நியங்களைத் தரிசிக்க முடியாதஎங்களுக்கு
உங்கள் துயர நினைவுகள் சொந்தம்
என்பது உங்களுக்குப் புரியுமா?

வறுமைச்சுவர்களை உடைத்தெறிய
வங்கக்கடல் தாண்டிவந்த
சின்னப்புறாக்கள்
உங்கள் வாழ்வில் வசந்தம் மலர
கண்ணீருடன் முகாரியிசைப்பது
உங்களுக்கு கேட்கவில்லையா?

